# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 88/2022 தேதி- 20.07.2026

(D.W.1) .ராஜேஷ்

**குறுக்கு விசாரணை**

வாதி வா.சா.ஆ. 12 ஆவணத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியும் அதற்கான எந்த பதில் அறிவிப்பும் நாங்கள் அனுப்பவில்லை என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியவில்லை. குளம் இருந்ததாக கூறுவதற்கு எந்த பழைய சர்வே வரைபடமும் தாக்கல் செய்யவில்லை என்றால் பழைய சர்வே வரைபடம் எங்களது அலுவலகத்தில் இல்லை. பழைய சர்வே வரைபடம் எங்களது அலுவலகத்தில் இல்லாத காரணத்தால் குளம் இருப்பதுபற்றிய விபரத்தை தெளிவாக கூறமுடியாது என்றால் பழைய சர்வே வரைபடத்தில் குளம் இருப்பது பற்றிய விபரம் எனக்கு தெரியாது தற்போதுள்ள சர்வே வரைபடத்தில் புறம்போக்கு உள்ளது. தற்போது இருக்கும் நீசர்வே வரைபடத்தையும் வருவாய் அலுவலகத்திலிருந்து சான்றொப்பமிட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இணைய வழி நகலை தாக்கல் செய்துள்ளேன். எந்த சர்வே எண்ணிற்காக இணையவழி சர்வே வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 404/9 சர்வே நம்பருக்கான வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன்.

இந்த வழக்கு எந்த சர்வே எண்ணிற்காக போடப்பட்ட வழக்கு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கிலுள்ள வாதி தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். அதில் எந்த சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 404/8 எ என குறிப்பிடப்பட்டுள்ளது. 404/8 எ எங்கே உள்ளது என்று எனக்கு தெரியாது, அதன் உரிமையாளர் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணிற்கு வாதி பட்டா தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டா தாசில்தார் வழங்கிய பட்டா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கின் சத்தியபிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன்.

வழக்குரையில் கண்ணனூர் கிராமம் சர்வே எண் 404/8 எ எனதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வியன்னூர் கிராமத்திலிருந்துதான் கண்ணனூர் கிராமம் பிரிக்கப்பட்டது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. பட்டிகை சொத்து முன்பு கல்குளம் தாலுகாவிலிருந்தது தற்போது திருவட்டார் தாலுகாவில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 404/8 எ வின் பரப்பளவு 15 சென்ட் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் குறிப்பிட்டிருக்கும் குற்குண்டு குளம் பழைய ஆவணத்தில் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் பார்த்ததில் எந்த ஆவணத்தில குற்குண்டு குளம் இருப்பதாக உள்ளது என்றால் திருவட்டார் வட்டம் கண்ணனூர் கிராம் புல எண் 404/9 ல் குற்குண்டு குளம் அமைந்ததாக வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து படிவம் 1 எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டது.

என்றைக்கு எங்கள் அலுவலகத்திற்கு குற்குண்டு குளம் இருப்பதுபற்றிய விபரம் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டது என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை. சிற்றாறு பட்டணங்கால்வாய் திட்டம் 1964 ஆம் ஆண்டு தொடங்கி 1970 ஆம் ஆண்டு முடிவடைந்தது என்றால் சரிதான். மேற்படி திட்டத்திற்கும் சர்வே எண் 404/9 ற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. பட்டணங்கால்வாய் 20 ஆம் கிலோ மீட்டர் அருகிலுள்ள மதகு நம்பர் 38 லிருந்து செல்லும் ஓடை வழியாக செல்லும் தண்ணீர் குற்குண்டு குளத்திற்கு செல்கிறது. அதற்கான வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை வருவாய் அலுவலகத்தில் உள்ளது. மதகு எண் 38 லிருந்து குற்குண்டு குளத்திற்கு எந்த தண்ணீரும் செல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 404/9 ஐ சுற்றிலும் எந்த குள புறம்போக்கு இல்லை பட்ட நிலம்தான் உள்ளது என்றால் சரியல்ல ஓடை உள்ளது. ஓடையும் இல்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் வாதி வழக்கு பட்டிகை சொத்திற்காக நிலவரி செலுத்திய ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியின் பட்டா நிலம் என்பதால் படிவம் 1 மற்றும் படிவம் 3 ஆகியவற்றை வாதிக்கு அனுப்பி எந்த உரிமையும் இல்லை என்றால் 404/8 எ க்கு எந்தபடிவமும் அனுப்பவில்லை. 404/9 க்கு மட்டும் படிவம் அனுப்பப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்கு பட்டிகை சொத்து மற்றும் 404/9 ஆகியவற்றை அளந்து

திட்டப்படுத்தினால் விபரம் தெரியும் என்றால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. வாதியின் சர்வே எண் 404/8 எ வில் தலையிட எந்த உரிமையும் இல்லை என்றால் 404/8 எ க்கு எந்த தலையீடும் செய்யவில்லை. வழக்கு பட்டிகை சொத்தில் வாதி 30 வருட பருவமுள்ள மரங்கள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மைக்கு புறம்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.